**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calender : | Miscellaneous | : |
| Preliminary Register : | Case No. | : **S.C.50/2023** |
| Sessions : | | |
| Deposition of witness for : | Prosecution | : **P.W.13** |
| | Defence | : **D.W.** |
| | Court | : **C.W.** |

| **Name :** | வேல்முருகன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.09.2025**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். வழக்கில் இறந்துபோன ராமகிருஷ்ணணன் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். ராமகிருஷ்ணணன் இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து சுமார் 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் பார்க்கபோனேன். நான் போகும் போது உடலை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். அதன்பின்னர் காவல்நிலையத்தில் இறந்தது சம்மந்தமாக கையெழுத்துகேட்டார்கள் நான் போட்டேன். என் முன்னிலையில் 2வது எதிரியை போலிசார் விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டபப்டும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.13 ஆகும்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

01.04.2023 அன்று என் முன்னிலையிலும் மற்றும் அ.சா.12 முன்னிலையிலும் 2வது எதிரியை போலிசார் விசாரித்தார்கள் என்றும், அப்போது அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை திருமணம் செய்த காலத்தில் இருந்து தெரியும். எதிரிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை.

**<u>மறுவிசாரணை</u>**:இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.